தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-2-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பிப்ரவரி 2014 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள நெல், பருத்தி, கரும்பு, நிலக்கடலை மற்றும் பப்பாளியில் பூச்சி நோயின் தாக்குதல் குறித்து வேளாண்மைப் பல்கலைக் கழக பயிர் பாதுகாப்பு மையம் வெளியிடும் செய்திக் குறிப்பு.

**நெற்பயிர்**

திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், இராமநாதபுரம், மற்றும் சேலம் மாவட்டங்களில் நெல் பயிரில் இலைச் சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த விளக்குப் பொறிகளை வைத்து அந்துப் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும். பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில் வேப்பங்கொட்டைச் சாறு 5 சத கரைசல் (அல்லது) குளோர்பைரிஃபாஸ் 35 இ.சி. 500 மீ.லி. (அ) புரோபினோபாஸ் 50 இ.சி. 400 மி.லி. ஒரு ஏக்கருக்குத் தெளிக்கவும்.

**பருத்தி**

சேலம், தர்மபுரி, தேனி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பருத்தி செடியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் தென்படுகிறது. இவற்றின் நடமாட்டத்தை மஞ்சள் நிற ஒட்டுப் பொறியை வைத்துக் கண்காணிக்க வேண்டும். தேவைப்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் கரைசல் (அல்லது) இமிடோகுளோபிரிட் 200 எஸ்.எல் 40 மி.லி. (அ) மிதைல் டெமட்டான் 25 இ.சி. 200 மில்லி ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும் (400 லிட்டர் தண்ணீர் ஒரு ஏக்கருக்கு).

**கரும்பு**

விருத்தாசலம், கடலூர், ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் கரும்பு தண்டுத்துளைப்பான் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்குக் குறைவாகவே காணப்படுகின்றது. இருந்தாலும் மழை பெய்ய வாய்ப்பு அதிகம் இல்லாத வறண்ட வானிலை

காணப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதால் தண்டுதுளைப்பானின் சேதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணிகளை 4வது மாதம் முதல் 15 நாட்கள் இடைவெளியில் ஏக்கருக்கு 1 சி.சி. என்ற அளவில் வெளியிட வேண்டும்.

**நிலக்கடலை**

நிலக்கடலை பயிரில் இலைச் சுருட்டுப்புழுவின் தாக்குதல், மதுரை, சேலம், தர்மபுரி, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த விளக்குப்பொறிகளை வைத்து அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கலாம். தேவைப்படும் பட்சத்தில் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் தயாரித்துத் தெளிக்க வேண்டும்.

**தென்னை**

இலைகருகல் நோய் பரவலாக கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமாரி மற்றும் பிற மாவட்டங்களில் காணப்படுகிறது. எனவே விவசாயிகள் கீழ்கண்ட முறைகளை கடைபிடித்து நோய் பரவலை தடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முதலில் நோய் முற்றிய இலைகளை வெட்டி எரித்து விடுவதால் நோய் பரவலை தடுக்கலாம். நோயுண்ட மரத்திற்கு ஒரு சத போர்டோ கலவை இருமுறை 30 நாள் இடைவெளியில் தெளிக்கவும் அல்லது கார்பெண்டசிம் 2 கிராம் (அ) ஹெக்சகோனகோல் (அ) டிரைடிமார்ப் 2 மிலி மருந்தை 100 மிலி தண்ணீரில் கலந்து வேர்மூலம் செலுத்த வேண்டும். இம்மருந்தை 3 மாத இடைவெளியில் மூன்று முறை தொடர்ந்து செலுத்த வேண்டும். சூடோமோனாஸ் புளோரசன்ஸ் என்ற எதிர் உயிரி பாக்டீரியா 200 கிராம் என்ற அளவில் 50 கிலோ மக்கிய தொழுஉரம் கலந்து உடன் 5 கிலோ வேப்பம் புண்ணாக்குடன் மரங்களைச் சுற்றி மண்ணில் இட வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட உர அளவுடன் 2 கிலோ பொட்டாஸ் அதிகமாக இட வேண்டும்.

**பப்பாளி மாவுப் பூச்சி**

மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிர்களில் உள்ள மாவுப் பூச்சியின் தாக்குதலை ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்தலாம். தற்போது கோடை காலம் ஆரம்பிப்பதால் பப்பாளி மாவுப் பூச்சி பப்பாளி, மல்பெரி, மரவள்ளி போன்ற பயிர்களில் தென்பட வாய்ப்பு உள்ளது. எனவே விவசாயிகள் இதைக் கண்காணிக்க வேண்டும். மாவுப் பூச்சியின் தாக்குதல் தென்பட்டால் பூச்சி மருந்து தெளிக்கக் கூடாது.

**தகவல்**

இயக்குநர்,
பயிர் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.

மக்கள் தொடர்பு அலுவலர்

E-mail: directorcpps@tnau.ac.in
kramaraju60@gmail.com

Phone : 0422-6611237
Tele - Fax: 0422-6611437
Mobile: 94420 06138

**TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY**
**CENTRE FOR PLANT PROTECTION STUDIES**

**Dr. K.RAMARAJU, Ph.D.**
**DIRECTOR i/c**

Coimbatore - 641 003
Tamil Nadu, India

---

**<u>No. CPPS/P&DSR/FEBRUARY/2014 dated 14.02.2014</u>**

Sir,

Sub: Plant Protection – Pest and Disease Surveillance Programme – Monitoring for February 2014 – forecasting for the month of February 2014 – Regarding.

*****

I furnish hereunder the pest and disease status in different districts of Tamil Nadu on different crops based on the surveillance report received from respective districts.

**PEST AND DISEASE FORECASTING FOR THE MONTH OF FEBRUARY 2014**

Based on the pest and disease surveillance reports, the following forecast are made. By and large the pest and disease incidence is below ETL.

**Rice**

In Tirunelveli, Thiruchirappalli, Kanyakumari, Pudukkottai, Thanjavur, Coimbatore, Ramanathapuram, and Salem districts, sporadic incidence of leaf folder and stemborer was noticed. Hence, farmers are adviced to monitor the activity of adult moths by installing light trap. If needed, they can spray neem seed kernel extract 5 per cent (or) use any one of the following insecticides if population exceeds ETL: chlorpyriphos 20 EC 500 ml / acre (or) profenophos 50 EC 400 ml / acre to contain the pest.

**Cotton**

In Salem, Dharmapuri, Theni, Tirunelveli and Virudunagar districts, sucking pests *viz.,* aphids, leafhoppers and thrips were noticed. Hence, farmers are adviced to monitor the sucking pests using yellow sticky traps. If needed spray NSKE 5 per cent (or) Imidacloprid 200 SL at 40 ml / acre (or) methyl demeton 25 EC 200 ml / acre (use 400 litre spray fluid / acre).

**Sugarcane**

In Virudhachalam, Cuddalore, Erode and Salem districts, the borer pest complex was noticed below ETL. Dry weather is expected in the coming months hence farmers are adviced to release the egg parasitoid, *Trichogramma* from $4^{th}$ month onwards at 15 days interval @ 1c.c/acre per release to manage the above pest.

**Groundnut**

Leafminer incidence was noticed in Madurai, Salem, Dharmapuri, Pudukottai, Tiruchirapalli, Tirunelveli, Coimbatore, Ramanathapuram and Virudunagar districts. Hence farmers are adviced to monitor leafminer adult, using light trap, if needed farmers can spray neem seed kernel extract 5 per cent.

**Coconut**

Leathel leaf blight disease was noticed in Coimbatore, Erode, Dindigul, Thanjavur, Tirunelveli, Kanyakumari and other districts of Tamil Nadu. Hence, farmers are adviced to follow the preventive measures. First remove and burn the severely affected leaves to avoid further spread, spray 1% bordeaux mixture for two times at 30 days interval (or) root feeding of carbendazim 2g (or) Hexaconazole or tridemorph 2 ml + 100 ml of water (3 times at 3 months interval). Application of 200g *Pseudomonas fluorescence* along with 50 kg of FYM + 5 kgs of neem cake / palm / year. Application of an additional quantity of 2 kgs of MOP is also recommended.

**Papaya mealybug**

Tapioca, papaya and mulberry farmers are advised to watch for the incidence of papaya mealybug, *Paracoccus marginatus.* There is a possibility for mealybug population increase in papaya, mulberry and tapioca due to the onset of summer. Hence, farmers are advised to monitor the crops. The farmers are requested not to spray any pesticide for this pest and adviced to use the Papaya mealybug parasitoids.

This is for the favour of your kind information. Necessary control measures may please be adopted.

Sd/- x x x x x
**DIRECTOR (CPPS) i/c**

To
The Commissioner of Agriculture,
Chepauk,
Chennai – 600 005.

Copy to all Joint Director of Agriculture

Copy to Agricultural Production Commissioner and Secretariat to Government, Secretariat, Chennai – 600 009.

Copy to the Professor and Head, Dept. of Agrl. Entomology / Plant Pathology and Nematology, TNAU, Coimbatore – 3.

Copy to the Professor and Head, Dept. of Agro Climate Research Centre, TNAU, Coimbatore –3.

Copy for favour of kind information to the Director of Research, TNAU, Coimbatore.

Copy to PC to VC, TNAU, Coimbatore – 3.

Copy to DEE, TNAU, Coimbatore – 03.

Copy to the Plant Protection Officer (PP), Central Integrated Pest Management Centre, Khajanagar, Tiruchy – 620 020 (TN) (e-Mail: ipmtn16@nic.in)